## காணை நோய் ஒழிப்பு மருத்துவ முகாம்

கருப்பாயூரணியில் கால்நடைகளுக்கான காணை நோய் ஒழிப்பு முகாம் வெள்ளிக்கிழமை தொடங்குகிறது.

கருப்பாயூரணி கால்நடை கிளை மருத்துவமனை மூலம் வண்டியூர், மேலமடை, மஸ்தான்பட்டி, பூலாங்குளம், இளமனூர் உள்ளிட்ட இடங்களில் தீவிர காணை நோய் ஒழிப்பு முகாம் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக வெள்ளிக்கிழமை முதல் கருப்பாயூரணி கால்நடை கிளை மருத்துவனையில் முகாம் நடைபெற உள்ளது. இதில், பொதுமக்கள் தங்கள் கால்நடைகளுக்கு இலவசமாகத் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம்.

கால்நடை மருத்துவர் டி. முருகலட்சுமி தலைமையில், கால்நடை ஆய்வாளர்கள் ஐ. மாரியப்பன், எம். சோணை முத்து, பராமரிப்பு உதவியாளர் எம். பழனிக்குமார் ஆகியோர் சிகிச்சை அளிக்க உள்ளனர்.

## தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தில் தோட்டப் பயிர்களுக்கு மானியம்

புதிய பரப்பில் தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்து, தோட்டப் பயிர் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் (2013-14) கீழ் மானியம் வழங்கப்படுகிறது.

இது குறித்து, தோட்டக்கலை துணை இயக்குநர் த. சந்திரசேகரன் தினமணி செய்தியாளரிடம் தெரிவித்தது:

மாவட்டத்தில் தோட்டப் பயிர்கள் சாகுபடி செய்யும் பரப்பளவை அதிகரிக்கும் வகையில், புதிய பரப்பில் பயிரிடப்படும் மா, எலுமிச்சை, திராட்சை, கோகோ, மலர் ஆகியவற்றை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

அதன்படி, 50 சதவீத மானியத்தில் மா அடர் நடவு (ஹெக்டேருக்கு 400 கன்றுகள்) செய்வதற்கு, 60 ஹெக்டேருக்கு ரூ. 14.4 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சாதாரண முறையில் மா நடவுக்கு 75 சதவீத மானியமாக 100 ஹெக்டேருக்கு ரூ. 9.9 லட்சம், 90 ஹெக்டேரில் எலுமிச்சை சாகுபடி செய்வதற்கு 75 சதவீத மானியத்தில்

எலுமிச்சை கன்று மற்றும் இடுபொருள்கள் வழங்க ரூ. 13.52 லட்சம், 10 ஹெக்டேரில் திராட்சை சாகுபடி செய்வதற்கு ரூ. 3 லட்சம் என நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தென்னையில் ஊடு பயிராக, 50 சதவீத மானியத்தில் 20 ஹெக்டேரில் கோகோ சாகுபடி செய்வதற்கு ரூ. 9.6 லட்சம், 40 ஹெக்டேரில் 50 சதவீத மானியத்தில் உதிரி மலர்கள் சாகுபடி செய்வதற்கு ஹெக்டேருக்கு ரூ. 12,000 வீதம் மொத்தம் ரூ. 4.8 லட்சம், 25 ஹெக்டேரில் 50 சதவீத மானியத்தில் சம்மங்கி சாகுபடிக்கு ரூ. 11.25 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், விவசாயி ஒருவர் அதிகபட்சமாக 5 ஹெக்டேர் வரை மானியம் பெறலாம்.

தகுதியுள்ள விவசாயிகள் சிட்டா, அடங்கல், குடும்பை அட்டை, 2 மார்பளவு புகைப்படம் ஆகியவற்றை கொண்டு வரவேண்டும். கூடுதல் விவரங்கள் பெற, அந்தந்தப் பகுதியில் உள்ள வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களை தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## பருவமழை பொய்த்ததால் வெள்ளரி விலை இருமடங்கு உயர்வு

பருவமழை பொய்த்ததன் காரணமாக காரியாபட்டியில் வெள்ளரிப் பிஞ்சு விலை இருமடங்கு உயர்ந்து விட்டது.

காரியாபட்டி பகுதிகளில் கடந்த இரண்டு வருடங்களாக பருவமழை பொய்த்ததன் காரணமாக கண்மாய்கள், ஊரணிகள், கிணறுகள் வறண்டு காணப்படுகின்றன. இதனால் விவசாயப் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக கிராம மக்களின் பெரும் வாழ்வாதாரமான வெள்ளரி விளைச்சல் இந்த ஆண்டு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. காரியாபட்டி பகுதியில் குராயூர், சென்னம்பட்டி, மருதங்குடி, ஓடைப்பட்டி உள்பட 20 கிராமங்களில் சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் வெள்ளரி விளைச்சல் நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் சுமார் பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் 400 ஏக்கர் வெள்ளரி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு முழுவதும் வெள்ளரி விளைச்சல் நடைபெறும் காரியாபட்டியில் இந்த ஆண்டு விளைச்சல் பாதிக்கப்பட்டதால், ஆயிரக்கணக்கான கிராம மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. வெள்ளரிப் பிஞ்சு விளைச்சால் பாதிப்பால் அதன் விலை இரண்டு மடங்கு அதிகமாக உயர்ந்துள்ளது. தரத்திற்கேற்ப 4 முதல் 6 எண்ணிக்கை

கொண்ட வெள்ளரிப் பிஞ்சு 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதுபற்றி வியாபாரி ராஜேந்திரன் கூறுகையில், பருவமழை பொய்த்து விட்டதால் வெள்ளரிப் பிஞ்சு விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே 10 எண்ணிக்கை கொண்ட வெள்ளரிப் பிஞ்சுகளை 10 ரூபாய்க்கு விற்பனை செய்தோம்.

பருவமழை பொய்த்தது, உரம் விலை உயர்வு, கூலி ஆட்கள் சம்பள உயர்வு போன்ற பல்வேறு காரணங்களால் தற்போது 6 எண்ணிக்கை கொண்ட வெள்ளரிப் பிஞ்சுகளை 20 ரூபாய்க்கு விற்பனை செய்து வருகிறோம் என்றார்.

## மழையில்லாமல் பயிர்கள் கருகிவிட்டதால் இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை

திருவாடானை தாலுகா முழுவதும் பயிர்கள் கருகிவிட்டதால் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகை வழங்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருவாடானை தாலுகா ஆர்.எஸ்.மங்கலம், சனவேலி, செங்குடி, தும்படகோட்டை, பாரனூர், ஆதியூர், அஞ்சுகோட்டை மங்களக்குடி, வெள்ளையபுரம், பாண்டுகுடி, தொண்டி, நம்புதாளை, முகிழத்தகம் என சுமார் 200க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 1லட்சத்து 50ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் விவசாயம் செய்யபட்டு வருகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன் பெய்த மழையை நம்பி விவசாயிகள் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் நிலப்பரளவில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டனர். பயிர்கள் வளர்ந்த நேரத்தில் தென்கிழக்குப் பருவமழை பொய்த்துவிட்ட நிலையில் கடும் வெயில் தாக்கி பயிர்கள் முற்றிலும் கருகி விட்டன. தற்போது வானிலை ஆய்வாளர்கள் வடகிழக்கு பருவ மழை சில நாட்களில் துவங்கும் என்று அறிவித்துள்ளது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்தாலும் மீண்டும் விவசாய பணிகள் துவங்குவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ10ஆயிரம் தேவை என்ற நிலையில் உள்ளனர். கடந்த ஆண்டு தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்தும் கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்து விட்டதால் கடும் பஞ்சம் ஏற்பட்டது. தமிழக அரசு ஓரளவு நிவாரணம் வழங்கியது. காப்பீடு திட்டத்தில் வழங்க வேண்டிய இழப்பீட்டு தொகையை தந்தால் மீண்டும் விவசாய பணிகள் துவங்க முடியும் என விவசாயிகள் கூறுகின்றனர்.

இது குறித்து விவசாய சங்க தாலுகா செயலாளர் நாதநாதன் கூறுகையில், பயிர்கள் வளர்ந்த நிலையில் பருவ மழை பொய்த்து விட்டது. கடும் வெயில் தாக்கி பயிர்கள் அனைத்தும் கருகிவிட்டன. கடந்த ஆண்டும் விவசாயிகள் கடும் நஷ்டத்தை சந்தித்தனர்.

மத்திய அரசின் தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் தொடக்க வேளாண்மை சங்கத்தில் காப்பீடு செய்தும் இதுவரை இழப்பீடு தொகை வழங்கவில்லை. எனவே காப்பீடு தொகையை வழங்க வேண்டும் என விவசாயிகள் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கருகும் நிலையில் கண்வலி பயிர்: கவலையில் விவசாயிகள்

போதிய மழை இன்மையால் மூலனூர் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள கண்வலி பயிர்கள் கருகும் நிலையில் உள்ளன. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மூலனூர் வட்டாரத்தில் மூலனூர், கன்னிவாடி, கிளாங்குண்டல், பொன்னிவாடி, பெரமியம் உள்பட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 10 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர்களில் கண்வலி மூலிகைப் பயிர், பயிரிடப்பட்டுள்ளது.

முற்றிலும் மருத்துவ குணம் கொண்ட இந்த பயிர் சாகுபடிக்கேற்ற சிறந்த மண்வளம் தமிழ்நாட்டிலேயே மூலனூர் வட்டாரத்தில் தான் உள்ளது.

கண்வலி சாகுபடியில் அதிக லாபம் கிடைப்பதால் ஆண்டுதோறும் விவசாயிகள் கண்வலி பயிர் சாகுபடியின் பரப்பளவை அதிகரித்து வருகின்றனர். பொதுவாக கண்வலிக் கிழங்குகள் முளைக்கும் மாதங்களான ஜூலை மற்றும் ஆகஸ்ட்டில் மூலனூர் வட்டாரத்தில் மழை பெய்த காரணத்தினால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்தனர்.

இந்நிலையில், தற்போது செடிகள் நன்கு வளர்ந்து வரும் நிலையில் புரட்டாசிப் பட்டம் மழை ஏமாற்றியதால் செடிகள் நீரின்றி கருகும் நிலையில் உள்ளன.

இதுகுறித்து அப்பகுதி விவசாயிகள் கூறுகையில், "இப்பகுதியில் போதிய மழை இன்மையால் கிணறு மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. தற்போது விவசாயத்திற்கே லாரிகளில் தண்ணீர் விலைக்கு வாங்கி பயன்படுத்தி வருகிறோம். பருவமழை முறையாக பெய்தால் மட்டுமே கண்வலி பயிர் மற்றும் இதர பயிர்களைக் காப்பாற்ற முடியும்' என்றனர்.

## பட்டறை அமைத்து பாதுகாக்கப்படும் சின்னவெங்காயம்

விலை உயர்வை எதிர்பார்த்து சின்னவெங்காயத்தை பட்டறை அமைத்து பாதுகாத்து வருகின்றனர் தாராபுரம் பகுதி விவசாயிகள்.

தாராபுரம் தாலூக்காவில் செலாம்பாளையம், தளவாய்பட்டிணம், சிக்கினாபுரம், ஊத்துப்பாளையம், நாரணாபுரம் உள்பட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் 10 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர்களில் சின்னவெங்காயம் பயிரிடப்பட்டிருந்து. கடந்த

ஒரு மாதத்திற்கு முன்பு அறுவடை செய்யப்பட்ட சின்னவெங்காயம் கிலோ ரூ.40 வரை விலை போனது.

தொடர்ந்து மேலும், விலை அதிகரித்து அதிகபட்சமாக ரூ.70 வரை விற்பனையானது. இந்நிலையில், மேலும் விலை உயர வாய்ப்புள்ளதாகக் கருதிய இப்பகுதி விவசாயிகள் குறிப்பிட்ட அளவு சின்னவெங்காயத்தை பட்டறை போட்டு பாதுகாத்து வருகின்றனர். தீபாவளி போன்ற பண்டிகைகள் விரைவில் வர உள்ளதால் சின்னவெங்காயம் உள்பட காய்கறிகளின் விலை கண்டிப்பாக உயரும் என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இப்பகுதியிலிருந்து சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு தினசரி 10-க்கும் மேற்பட்ட லாரிகளில் கிலோ ரூ.60 என்ற விலை அடிப்படையில் சின்னவெங்காயம் அனுப்பப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## கொப்பரை விலை உயர்வு

வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நடைபெற்ற ஏல விற்பனையில் கடந்த வாரத்தை விட கொப்பரைத் தேங்காய் அதிக விலைக்கு விற்பனையானது.

வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை தோறும் ஏலம் நடத்தப்படுகிறது. இந்த முறை ஏலத்திற்கு மொத்தம் 651 மூட்டைகள் வந்திருந்தன. முதல் தரக் கொப்பரை உயர்ந்த பட்ச விலையாக கிலோ ரூ.63.25-கக்கும், மட்ட ரகம் குறைந்த பட்ச விலையாக ரூ.40.65-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ.18 லட்சத்து 60 ஆயிரத்து 834-க்கு ஏலம் நடைபெற்றது. சென்ற வாரம் கொப்பரை விலை ரூ.58.15-ஆக இருந்த நிலையில், தற்போது ரூ.5.10 உயர்ந்துள்ளது. வரத்து குறைந்து வரும் நிலையில், வரும் வாரங்களில் விலையேற்றத்திற்கு வாய்ப்புள்ளதாக விற்பனைக்கூட கண்காணிப்பாளர் ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

## 95 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு!

நீர் நிலைகளில் போதிய நீர் இருப்பு உள்ளதால் ஈரோடு மாவட்டத்தில் நெல் நடவுப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மாவட்டத்தில் இந்த ஆண்டில் 95 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வறட்சி காரணமாக கடந்த ஆண்டு அணைகள், குளங்கள் மற்றும் நீர் நிலைகளில் நீர் இருப்பு போதுமான அளவுக்கு இல்லை. இதனால், பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனத்துக்கு உள்பட்ட குறுவை சாகுபடிக்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டது.

போதிய நீர் இருப்பு இல்லாததால் கீழ்பவானி, காலிங்கராயன் பாசனப் பகுதிகளில் வேளாண் பணிகள் பெருமளவு பாதிக்கப்பட்டன. இதன் காரணமாக வழக்கமாக ஒரு லட்சம் ஏக்கரில் செய்யப்படும் நெல் சாகுபடி கடந்த ஆண்டில் வெறும் 15,000 ஏக்கராகச் சுருங்கிவிட்டது.

இந் நிலையில், இந்த ஆண்டு பரவலாக அணையின் நீர்ப் பிடிப்பு பகுதிகளான கேரளம் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் நல்ல மழை பெய்ததால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. தொடர் நீர்வரத்து காரணமாக பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி-அரக்கன்கோட்டை, கீழ்பவானி மற்றும் காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்துக்கும், மேட்டூர் அணையில் இருந்து மேட்டூர் வலதுகரைப் பாசனத்துக்கும் தண்ணீர் திறக்கப்பட்டு நெல் சாகுபடிப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

குளங்கள், ஆழ்துளைக் கிணறுகளிலும் போதிய நீர் இருப்பு உள்ளது. எனவே, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நெல் சாகுபடிப் பரப்பு ஏறத்தாழ 6 மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது.

இதுகுறித்து, வேளாண் துறையினர் கூறியது:

ஆண்டுதோறும் ஈரோடு மாவட்டத்தில் 90 ஆயிரம் முதல் ஒரு லட்சம் ஏக்கர் வரை நெல் சாகுபடி நடைபெறும். கடந்த ஆண்டு வறட்சியால் 15 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே சாகுபடி நடைபெற்றது.

இந் நிலையில், அனைத்து வாய்க்கால்களிலும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் வேளாண் பணிகள் தீவிரமடைந்துள்ளன. பெரும்பாலான விவசாயிகள் நெல் சாகுபடியில் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்தாண்டு தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் 12,500 ஏக்கரில் குறுவை சாகுபடி செய்து அறுவடையும் தீவிரமாக நடந்து வருகிறது.

இதேபோல, 12,500 ஏக்கரில் சம்பா சாகுபடியும் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. கீழ்பவானி வாய்க்காலில் மொத்தம் 52,500 ஏக்கரிலும், மேட்டூர் வலது கரையில் 12,500 ஏக்கரும், காலிங்கராயன் வாய்க்கால் பகுதியில் 6,250 ஏக்கர் என மொத்தம் 95 ஆயிரம் ஏக்கர் (38 ஆயிரம் ஹெக்டேர்) பரப்பில் இந்தாண்டு நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப தற்போது தீவிரமாக நெல் சாகுபடிப் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

மொத்த நெல் சாகுபடியில் 60 சதவீதம் அதாவது 56,750 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி எனப்படும் ஒற்றை நாற்று நடவு முறையிலான நெல் சாகுபடி செய்யவும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக மாவட்டம் முழுவதும் 200-க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனைத் திடல்கள் அமைக்கப்பட்டு பணிகள் தீவிரமடைந்துள்ளன.

நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு விதை நெல் தட்டுபாடின்றிக் கிடைக்கும் வகையில் 1024 மெட்ரிக் டன் விதை நெல் அரசு, கூட்டுறவு மற்றும் தனியார் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. குறுவையைப் பொருத்தவரை ஏஎஸ்டீ-16, 36 ரகங்களும், சம்பாவில் ஏடீடி-38, 39, ஐ.ஆர்-20, பீபிடி, வெள்ளைப் பொன்னி, கோ- 43 எனப்படும் இட்லி குண்டு ரகங்களும், கோ-50 மற்றும் ஏடீடிஆர்-45 ரகங்களையும் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.

அரசு மற்றும் கூட்டுறவு மூலமாக விற்பனை செய்யப்படும் விதை நெல்லுக்கு கிலோ ரூ.5 வீதம் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வேளாண் துறையினர் தெரிவித்தனர்.

ஈரோடு மாவட்டத்தில் நடப்பாண்டில் 95 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு வெறும் 15 ஆயிரம் ஏக்கர் மட்டுமே சாகுபடியான நிலையில் தற்போது பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் நெல் சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 75.90 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 75.90 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,744 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,400 கன அடி நீரும், வாய்க்காலில் 2,560 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 13.61 டி.எம்.சி.

## கோமாரி நோய் தடுப்பூசித் திட்ட முகாம்

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஊராட்சி ஒன்றியம், எஸ்.கொல்லப்பட்டி கிராமத்தில் கோமாரி நோய் தடுப்புத் திட்ட முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

தருமபுரி மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் 2013-14-ஆம் ஆண்டுக்கான கோமாரி நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கால்நடை பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர் எஸ்.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மருத்துவர்கள் சரவணச் செல்வன், பூபால், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மதலைமுத்து உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் 1,956 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகள் போடப்பட்டன.

100 சத இலக்கை எட்டும் வகையில், தடுப்பூசி போடுவதில் விடுபட்ட கால்நடைகளுக்கு வரும் வாரம் தடுப்பூசி போடப்படும் என்றும் அதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## துவரை நாற்று நடும் பணி: வேளாண் அலுவலர்கள் ஆய்வு

ஓமலூர் அருகே துவரை நாற்று நடவு செயல் விளக்கப் பணிகளை வேளாண்மைத் துறை அலுவலர்கள் ஆய்வு செய்தனர்.

சேலம் மாவட்டத்தில், சுமார் 22 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில், துவரை, உளுந்து, பச்சைப் பயறு, கொள்ளு ஆகிய பயறு வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. பயறு வகைப் பயிர்களின் மகசூலை அதிகரிக்கும் வகையில், புதிய தொழில்நுட்பமான துவரை நாற்று நடவு முறையில் செயல்விளக்கத் திடல் ஓமலூர் அருகேயுள்ள காடையாம்பட்டியில் அமைக்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் ஒரு ஹெக்டேர் நிலம் உள்ள 100 விவசாயிகளைத் தேர்வு செய்து, அவர்களுக்கு 50 சத மானியத்தில் துவரை விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள், நுண்ணூட்டம் மற்றும் உயிரி உரங்கள் ஆகிய இடுபொருள்கள் வழங்கப்பட்டன. துவரை விதைகளைப் பாலித்தீன் பைகளில் இட்டு முளைக்க வைத்து 25 நாள்கள் கழித்து வயலில் நடவு செய்ய வேண்டும். விவசாயிகள் இவ்வாறு தயார் செய்து வைத்துள்ள துவரை நாற்றுகளை காடையாம்பட்டி வட்டார வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் அ.நாசர் தலைமையிலான அலுவலர்கள் வியாழக்கிழமை ஆய்வு செய்தனர்.

அப்போது, விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளையும் அவர்கள் வழங்கினர். துணை வேளாண்மை அலுவலர் ரவிக்குமார், தொழில்நுட்ப மேலாளர் ராஜேந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## மானிய விலையில் வேளாண் கருவி வழங்கும் நிகழ்ச்சி

வேளாண்துறை சார்பில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் வேளாண் கருவி வழங்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

புதுகை வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் தலைமை வகித்து, திருவரங்குளம் வட்டாரம், நெடுவாசல் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சசிக்குமார் என்பவருக்கு ரூ. 89,000 மதிப்பிலான ரொட்டேவேட்டர் கருவியை ரூ.30 ஆயிரம் மானிய சலுகையுடன் வழங்கினார்.

இதில், வேளாண் துணை இயக்குநர் (மாநிலத்திட்டம்) கா. பாலன், வேளாண் துணை இயக்குநர் (மத்திய அரசுத் திட்டம்) ஆர். சதானந்தம், திருவரங்குளம் வேளாண் உதவி இயக்குநர் இராம. சிவக்குமார், வேளாண் அலுவலர்கள் ஆர். ஜெகதீஸ்வரி, சு. அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கால்நடை மருத்துவ சிகிச்சை முகாம்

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்நாடு கால்நடை மருத்துவக் கல்லூரியின் சார்பில், சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் அண்மையில் நடைபெற்றது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமான ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் கோவிலூர் கிராமத்தில் நடைபெற்றது.

இந்த முகாமில் 25 மாடுகளுக்கு மலடு நீக்க சிகிச்சை அளிக்கப்பட்டது. குறிப்பாக, சினைப்பிடிக்காத 8 மாடுகளுக்கு சிறப்பு சிகிச்சை இலவசமாக அளிக்கப்பட்டது. மேலும், 5 மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டலும், பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட 131 கால்நடைகளுக்கு சிகிச்சையும், குடற்புழு நீக்கமும் செய்யப்பட்டது.

சினைப்பிடிக்காத 8 மாடுகளுக்கு தாது உப்பு கலவை பாக்கெட்டுகள் வழங்கப்பட்டன. மேலும், கால்நடை வளர்ப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் கையேடுகளும் வழங்கப்பட்டன. இம்முகாமில் கோவிலூர் மற்றும் நெடுவாக்கோட்டை ஆகிய கிராமங்களிலுள்ள கால்நடை வளர்ப்போர் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

இம்முகாமில் கால்நடை மருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

### வேதாரண்யம் பகுதியில் சம்பா பயிர் பாதிப்பு

காவிரி கடைமடையான நாகை மாவட்டம்,வேதாரண்யம்,தலைஞாயிறு பகுதிகளில் பாசன நீர் பற்றாக்குறையால் சம்பா பயிர் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

காவிரிப் பாசனத்துக்குள்பட்ட தலைஞாயிறு பகுதியில் ஜூலை முதல் வாரத்திலேயே தொடங்கப்பட்ட நிகழாண்டுக்கான சம்பா சாகுபடி பணிகள் 95 சதம் நேரடி நெல் விதைப்பு முறையில் முடிக்கப்பட்டுள்ளன.

சி.ஆர். 1009 மற்றும் பையூர் பொன்னி போன்ற ரக பயிர்கள் தற்போது 50 நாள்களுக்கு மேலான வயதுடையவையாக உள்ளன.

இந்த வயல்களில் பணிகளை மேற்கொள்ள போதிய அளவு தண்ணீர் இல்லாததால் அவதியுற்ற விவசாயிகள், ஆறுகளில் போதிய அளவு தண்ணீர் கேட்டு போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

மானாவாரியைப் பொருத்தவரை குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே நேரடி விதைப்பு முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி சுமார் 50 சதப் பரப்பில் மட்டுமே பணிகள் முடிந்திருந்தாலும் மழை பெய்தால்தான் பயிர் வெளியில் வரும் நிலையுள்ளது.

இதனால், கருகும் பயிர்களை காக்க நீர்நிலைகள் சார்ந்த இடங்களில் ஆயில் இஞ்சின் உதவியோடு தண்ணீர் இறைவை செய்யும் விவசாயிகள், இதற்காக ஒரு மணி நேரத்துக்கு சுமார் ரூ.250 முதல் 300 வரை செலவிடப்படுவதாகத் தெரிவித்தனர்.

இந்நிலையில் மழை பெய்தால் மட்டுமே சாகுபடி செய்யும் நிலையில் உள்ள சுமார் 8 ஆயிரம் ஹெக்டேர் மானாவாரி பரப்பில் நேரடி விதைப்பு செய்வது தாமதமாகிறது.

ஒரே நேரத்தில் அதிக மழை பொழிந்தாலும் விதைப்பு செய்யும் பணி பாதிக்கும் என்பதால் விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

மேலும் கடந்தாண்டுக்கான பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கத் தாமதமாகும் நிலையில்,நிகழாண்டுக்குரிய காப்பீடு தொடர்பான அரசு அறிவிப்பும் முறையாக வரவில்லை.

எனவே, வறட்சியைச் சமாளிக்க ஆறுகளில் கூடுதல் அளவு தண்ணீரை திறந்து விடவும்,கூட்டுறவு வங்கிகளில் உடனடி பயிர்க் கடன் கிடைக்கவும்,கடந்தாண்டில் டீசல் மானியம் போன்ற உதவிகள் கிடைக்க உதவியாக இருந்த சம்பா தொகுப்பு திட்டத்தை நிகழாண்டுக்கும் அரசு அளிக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

### பாசன நீர் பற்றாக்குறை : வேதாரண்யம் பகுதியில் சம்பா பயிர் பாதிப்பு

காவிரி கடைமடையான நாகை மாவட்டம்,வேதாரண்யம்,தலைஞாயிறு பகுதிகளில் பாசன நீர் பற்றாக்குறையால் சம்பா பயிர்கள் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

காவிரிப் பாசனத்துக்குள்பட்ட தலைஞாயிறு பகுதியில் ஜூலை முதல் வாரத்திலேயே தொடங்கப்பட்ட நிகழாண்டுக்கான சம்பா சாகுபடி பணிகள் 95 சதம் நேரடி நெல் விதைப்பு முறையில் முடிக்கப்பட்டுள்ளன.

சி.ஆர். 1009 மற்றும் பையூர் பொன்னி போன்ற ரக பயிர்கள் தற்போது 50 நாள்களுக்கு மேலான வயதுடையவையாக உள்ளன.

இந்த வயல்களில் பணிகளை மேற்கொள்ள போதிய அளவு தண்ணீர் இல்லாததால் அவதியுற்ற விவசாயிகள், ஆறுகளில் போதிய அளவு தண்ணீர் கேட்டு போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

மானாவாரியைப் பொருத்தவரை குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே நேரடி விதைப்பு முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி சுமார் 50 சதப் பரப்பில் மட்டுமே பணிகள் முடிந்திருந்தாலும் மழை பெய்தால்தான் பயிர் வெளியில் வரும் நிலையுள்ளது.

இதனால், கருகும் பயிர்களை காக்க நீர்நிலைகள் சார்ந்த இடங்களில் ஆயில் இஞ்சின் உதவியோடு தண்ணீர் இறைவை செய்யும் விவசாயிகள், இதற்காக ஒரு மணி நேரத்துக்கு சுமார் ரூ.250 முதல் 300 வரை செலவிடப்படுவதாகத் தெரிவித்தனர்.

இந்நிலையில் மழை பெய்தால் மட்டுமே சாகுபடி செய்யும் நிலையில் உள்ள சுமார் 8 ஆயிரம் ஹெக்டேர் மானாவாரி பரப்பில் நேரடி விதைப்பு செய்வது தாமதமாகிறது.

ஒரே நேரத்தில் அதிக மழை பொழிந்தாலும் விதைப்பு செய்யும் பணி பாதிக்கும் என்பதால் விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

மேலும் கடந்தாண்டுக்கான பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கத் தாமதமாகும் நிலையில்,நிகழாண்டுக்குரிய காப்பீடு தொடர்பான அரசு அறிவிப்பும் முறையாக வரவில்லை.

எனவே வறட்சியைச் சமாளிக்க ஆறுகளில் கூடுதல் அளவு தண்ணீரை திறந்து விடவும்,கூட்டுறவு வங்கிகளில் உடனடி பயிர்க் கடன் கிடைக்கவும்,கடந்தாண்டில் டீசல் மானியம் போன்ற உதவிகள் கிடைக்க உதவியாக இருந்த சம்பா தொகுப்பு திட்டத்தை நிகழாண்டுக்கும் அரசு அளிக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## கனரா வங்கி: விவசாயிகளுக்கு கடனுதவி

சாத்தான்குளம் அருகேயுள்ள பேய்க்குளம் கனரா வங்கியில் விவசாயிகளுக்கு ரூ.4 லட்சம் மதிப்பிலான கடனுதவிகள் வழங்கப்பட்டன.

வங்கி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு வங்கி மேலாளர் வெங்கடாசலபதி தலைமை வகித்தார்.

வங்கி ஊழியர் முருகன் வரவேற்றார். இதில் மூலக்கரைப்பட்டியைச் சேர்ந்த விவசாயி சீதாராமனுக்கு டிராக்டர், சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 4 லட்சம் மதிப்பிலான கடனுதவிகள்

வழங்கப்பட்டன.இதில் ஸ்ரீவெங்கடேஸ்வரபுரம் ஊராட்சித் தலைவர் விஜயலட்சுமிஸ்ரீதர், மாவட்ட இளைஞர் காங்கிரஸ் செயலர் போனிபாஸ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். வங்கி ஊழியர் ஜெபக்கிருபை நன்றி

கூறினார்.

## சொர்ணவாரி பட்ட நெல் சாகுபடி: ஹெக்டேருக்கு 8 டன் மகசூல்

கடலூர் வட்டாரத்தில் நடப்பு ஆண்டு சொர்ணவாரி பட்டத்தில் சாகுபடி செய்த பயிர் அறுவடை சோதனை மூலம் நெல் மகசூல் ஹெக்டேருக்கு 8 டன் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டம், நாகப்பனூர் கிராமத்தில் ஏகவல்லி, தென்னம்பாக்கத்தில் ஜெயசீலன், சுப்ரமணியன் ஆகியோர் வயலில் சாகுபடி செய்த நெற்பயிர்கள்அறுவடை செய்யப்பட்டன. அப்போது, கடலூர் மாவட்ட புள்ளியியல் துணை இயக்குநர் லதா, புள்ளியியல் ஆய்வாளர் சுதர்சனன், வேளாண் அலுவலர் பூவராகவன், சசிக்குமார் ஆகியோர் மகசூல் குறித்து கணக்கீடு ஆய்வு செய்தனர். இதில் ஹெக்டேருக்கு 8 டன் அளவில் மகசூல் பெற்றுள்ளது கணக்கீடு செய்யப்பட்டது.

## நெல் கொள்முதல் நிலையங்களை கூடுதலாக திறக்கக் கோரிக்கை

காவிரி டெல்டா மாவட்டங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை கூடுதலாக திறக்க வேண்டும் என பிற்படுத்தப்பட்டோர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

அப்பேரவையின் ஆலோசனைக் கூட்டம் சிதம்பரம் அருகே உள்ள புவனகிரியில் புதன்கிழமை நடைபெற்றது. நகரத் தலைவர் குமார் தலைமை வகித்தார். தொகுதி அமைப்பாளர் ராஜேந்திரன் வரவேற்றார். கடலூர் மாவட்டச் செயலாளர் வீர.வன்னியவேங்கன், மாநில இணைச் செயலாளர் அரங்க.பாஸ்கர், தொழிற்சங்க அமைப்பாளர் தனவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் பேரவை பொதுச் செயலாளர் வீர.வன்னியராஜா சிறப்புரையாற்றினார். புதுச்சேரி மாநிலச் செயலாளர் கோபி, மாநில கொள்கை விளக்க அணித் தலைவர் கவிஞர் கலைமணி உள்ளிட்டோர் பேசினர்.

கூட்டத்தில், இலங்கை அரசு பிடித்து வைத்துள்ள தமிழக மீனவர்களையும், மீன்பிடி விசைப் படகுகளை விடுவிக்க மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், பண்ருட்டி பஸ்நிலையத்தில் மர்மமான முறையில் இறந்துகிடந்த முருகனின் மரணம் குறித்து சிபிசிஐடி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### 50% மானிய விலையில் களைக்கொல்லி விநியோகம்

நடப்பு சம்பா பருவத்தில் நேரடி நெல் விதைப்பு செய்துள்ள விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் களைக்கொல்லி விநியோகிக்கப்படுகிறது என பரங்கிப்பேட்டை வட்டார வேளாண் உதவி இயக்குநர் எஸ்.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

நேரடி நெல் விதைப்பு செய்கையில் களைகளும், பயிரும் ஒன்றாக முளைக்கின்றன. இவ்வாறு முளைக்கும் களைகளை ஆள்கள் மூலம் அகற்றுவது அதிக செலவை ஏற்படுத்தும்.

எனவே வளர்ந்த களைகளை கட்டுப்படுத்த பிஸ்பைரிபேக் 10 சதவீதம் சோடியம் என்ற நவீன களைக்கொல்லியை, வேளாண் துறை விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் ரூ.300-க்கு வழங்கி வருகிறது.

பயிர் முளைத்ததிலிருந்து 15 நாள்களுக்கு பின்னர், வயலில் நடந்தால் கால் அழுந்தும் வகையில் ஈரம் இருக்கும் போது ஏக்கருக்கு 8 மி.லி. களைக்கொல்லியை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

களைக்கொல்லி தெளித்த 3ஆம் நாள் வயலில் நீர் நிறுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் களைகள் விரைவில் அழுகிவிடும்.

பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் சிதம்பரம், பரங்கிப்பேட்டை, பின்னத்தூர் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் இந்த களைக்கொல்லி விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேலும் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் பணிக்காக புகைப்படம் பெறப்பட்டு வருகிறது. எனவே புகைப்படம் அளிக்காத விவசாயிகள், களைக்கொல்லிக்காக பரிந்துரை பெற வரும்போது புகைப்படத்தை எடுத்து வந்து உதவி வேளாண் அலுவலரிடம் அளிக்கலாம் என எஸ்.ரமேஷ் தெரிவித்துள்ளார்.

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

### வேளாண் அறிவியல் நிலையத்தில் காளான் வளர்ப்பு பயிற்சி துவக்கம்

விருத்தாசலம்:விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலையத்தில், விவசாயிகளுக்கான காளான் வளர்ப்பு குறித்த நான்கு நாள் பயிற்சி முகாம் துவங்கியது. நிகழ்ச்சிக்கு, வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் அருணாச்சலம் தலைமை தாங்கினார். உதவி பேராசிரியர்கள் சரவணன், கண்ணன் ஆகியோர் காளான் வளர்ப்பு மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு குறித்து பயிற்சியளித்தனர். முகாமில் சிப்பி காளான், மொட்டு காளான், பால் காளான் வளர்ப்பது, அதில் அடங்கியுள்ள சத்துக்கள், மதிப்புக் கூட்டப்பட்ட ஊறுகாய், சூப், சில்லி, பஜ்ஜி உள்ளிட்ட பொருட்கள் தயாரிப்பது, விற்பனை செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சி முடிந்த பின், பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

## நாட்டு கோழி வளர்ப்பு திட்டத்திற்கு கடனுதவி வழங்க மறுப்பு : பரிந்துரை கடிதத்திற்கு உத்தரவாதம் கேட்கும் வங்கிகள்

திருத்தணி : மாவட்டத்தில், நாட்டுக் கோழி வளர்ப்பு திட்டத்திற்கு, விவசாயிகளுக்கு உத்தரவாதமின்றி கடனுதவி வழங்க, ஆட்சியர் உத்தரவிட்டும், வங்கிகள் கடன் தர மறுக்கின்றன. வங்கிகள் தரப்பில், இதுவரை கடன் வாங்கிய விவசாயிகள், கடனை திருப்பித் தராதது காரணமாக கூறப்படுகிறது. ஆடு, மாடு, கோழி உள்ளிட்ட கால்நடைகளின் வளர்ப்பில், மாவட்டத்தில், 30 ஆயிரம் விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர். அவர்கள் பயன்பெறும் வகையில், தமிழக அரசு, மானிய கடன் உதவியுடன் நாட்டுக் கோழி வளர்க்கும் திட்டத்தை, கடந்த, 2012 – 13ல் அறிமுகப்படுத்தியது. நடைமுறை அதன்படி, 250 நாட்டுக் கோழி குஞ்சுகளுடன் பண்ணை அமைத்துக் கொள்ள, விவசாயிகளுக்கு தலா, 1.17 லட்சம் கடனுதவி வழங்கப்படும் என, அறிவிக்கப்பட்டது. அதில், தமிழக அரசு மற்றும் நபார்டு வங்கி, தலா, 25 சதவீதத்தை மானியமாக வழங்க, கடன் வாங்கும் விவசாயி, 50 சதவீதம் அதாவது, 58 ஆயிரம் ரூபாயை மட்டும் திருப்பிக் கொடுத்தால் போதும். இந்த திட்டத்தில் சேர, மாவட்ட கால்நடை துறையிடம் விண்ணப்பிக்க வேண்டும். வங்கிகளுக்கு பரிந்துரை கடிதங்கள் அனுப்புவர்.அவர்கள், சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு கடன் வழங்க ஒப்புக் கொள்வதாக கடிதம் கொடுப்பர். இந்த கடிதங்களை கால்நடை துறையிடம் ஒப்படைத்தால், ஆட்சியர் உத்தரவுப்படி, கடனுக்கான அரசு மானியம் கிடைக்கும்.

அதிகரிப்பு

கடந்த ஆண்டு (2012– -13) மாவட்டத்தில், 45 பேருக்கு நாட்டுக் கோழி வளர்ப்பு திட்டம்

மூலம், கடன் வழங்க அரசு முடிவு செய்தது. ஆனால், இதில், 30 பேர் மட்டுமே, வங்கி மேலாளர்களின் பரிந்துரை கடிதம் பெற்றுக் கொடுத்தனர். அவர்களுக்கு, அரசு மானியத்துடன் கடனுதவி வழங்கப்பட்டது. மீதமுள்ள, 15 பேருடைய மானிய தொகை பயன்படுத்தப் படாததால், அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டது. நடப்பாண்டில் (2013 –– 14), 240 விவசாயிகளுக்கு கடனுதவி வழங்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. கடந்த ஜூன் மாதம் முதல், இதற்கு, 300 விவசாயிகள் விண்ணப்பித்து உள்ளனர்.

அலைக்கழிப்பு

இவர்களுக்கு தேவையான பரிந்துரை கடிதங்களை, கால்நடை துறை, வங்கிகளுக்கு அனுப்பிவிட்டது. ஒரு குறிப்பிட்ட தொகையை வங்கியில் ‘டெபாசிட்’ செய்தால் தான், கடிதம் தருவோம் என, வங்கி அதிகாரிகள், விவசாயிகளை அலைக்கழிப்பதாக புகார்கள் எழுந்து உள்ளன.

இதுகுறித்து, பெயர் வெளியிட விரும்பாத வங்கி மேலாளர் ஒருவர் கூறுகையில், ‘பெரும்பாலான விவசாயிகள் கடன் வாங்கிக் கொண்டு, பலமுறை திருப்பி செலுத்த அறிவுறுத்தியும், கடனை செலுத்துவதில்லை. தற்போது, வங்கியில், ஆட்கள் பற்றாக்குறையால், கடன் வசூலிப்பதிலும் தாமதம் ஆகிறது. தகுதியும் உத்தரவாதமும் கொடுப்பவர்களுக்கு, கடனுதவி வழங்குவதற்கு பரிசீலிக்கப்படும்’, என்றார். இந்த கெடுபிடியால், இதுவரை, மாவட்டத்தில், 50 பேருக்கு மட்டுமே வங்கி கொடுக்கும் கடிதம் கிடைத்து உள்ளது. வங்கி கடிதங்கள் இந்த மாதம், 31ம் தேதிக்குள் ஆட்சியருக்கு கிடைத்தால் தான், மானியம் கிடைக்கும். வங்கிகள் ‘கறாராக’ இருப்பதால், இந்த ஆண்டு விண்ணப்பித்த பெரும்பாலானோருக்கு, தகுந்த நேரத்தில் வங்கி கடிதமும், திட்ட பயனும் கிடைக்காது என, தெரிகிறது.

ஆட்சியர் உத்தரவு காற்றில்...

விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்திலும், வங்கி அதிகாரிகளுக்கு நடத்தப்படும் கூட்டத்திலும், நான்கு லட்சம் ரூபாய் வரை, வங்கிகளில் கடன் கேட்கும் விவசாயிகளுக்கு எவ்வித உத்தரவாதமும் இல்லாமல் கடன் வழங்க வேண்டும் என, ஆட்சியர் அறிவுறுத்துகிறார். அப்போது, வங்கி உயர்அதிகாரிகள், சரி என, கூறுகின்றனர். ஆனால், விவசாயிகள், வங்கிக்கு சென்று கடனுதவி கேட்கும்போது, அதிகாரிகள் கடன் கொடுக்க மறுக்கின்றனர்.

## விவசாய விளை பொருளை ஏற்றுமதி செய்யணும்: அப்துல்கலாம் யோசனை

ராசிபுரம்: ""இந்தியாவின் பொருளாதார வீழ்ச்சியை சரி செய்ய, விவசாய விளை பொருட்களை ஏற்றுமதி செய்ய வேண்டும்," என, முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தெரிவித்தார். ராசிபுரம் அடுத்த பாவை கல்வி நிறுவனத்தில் நடந்த நிகழ்ச்சியில், கல்வி நிறுவன தலைவர் நடராஜன் வரவேற்றார். முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் பங்கேற்று பேசியதாவது: மாணவர்கள், தனித்திறனை உணர்ந்து, தன்னம்பிக்கையுடன் செயல்பட வேண்டும். ஒருவரை நினைவில் நிறுத்தி வைக்க, அவர்களிடம் உள்ள தனித்திறனே காரணம். உயர்ந்த நோக்கம், அறிவாற்றல், கடின உழைப்பு, விடாமுயற்சி இருந்தால், தனித்திறன் கொண்டவர்களாக உயரலாம். இவ்வாறு அவர் பேசினார். பின்னர், மாணவ, மாணவியர், அப்துல்கலாமிடம் கேட்ட கேள்விகளுக்கு, பதில் அளித்து பேசியதாவது:

மாணவர்: இன்றைய இளைஞர்களுக்கு என்ன தேவை?

கலாம்: இந்தியாவில், 60 கோடி இளைஞர்கள் உள்ளனர். லட்சியம் ஒன்றினை அவர்கள் மனதில் கொண்டு முன்னேற வேண்டும். அதுவே இன்றைய தேவை.

மாணவர்: நீங்கள் இஸ்ரோ விஞ்ஞானியாக, பேராசிரியராக, ஜனாதிபதியாக இருந்தீர்கள். இதில், எதை நீங்கள் மிகவும் விரும்புகிறீர்கள்?

கலாம்: விஞ்ஞானி, அரசுப்பணிகளில் இருந்தததை விட, ஆசிரியராக இருப்பதையும், மாணவர்களுடன் இருப்பதையுமே விரும்புகிறேன்.

மாணவர்: விளைவுகளை எதிர்பாராமல், உணர்ச்சிப்பூர்வமாக அவசர முடிவு எடுக்கும் இன்றைய இளைஞர்களுக்கு உங்களின் வழிகாட்டுதல் என்ன?

கலாம்: இளைஞர்கள் நான்கு விஷயங்களை நினைவில் கொள்ள வேண்டும். அதில், 20 வயதுக்குள் ஒரு பெரிய லட்சியத்தை மனதில் கொள்ள வேண்டும். அதற்கான அறிவை பெற தேடுதல் வேண்டும். அயராது உழையுங்கள். தோல்வியைக் கண்டு துவளாதீர். அவ்வாறு இருந்தால், உங்கள் முடிவுகள் சிறந்த முடிவுகளாக இருக்கும்.

மாணவர்: இந்திய பொருளாதார வீழ்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும்?

கலாம்: விவசாய விளை பொருட்களை ஏற்றுமதி செய்ய வேண்டும். இவ்வாறு பதிலளித்தார். கல்வி நிறுவன தாளாளர் மங்கை நடராஜன், செயலாளர் பழனிவேல், இணைச் செயலாளர் பழனிவேல், இயக்குனர் செந்தில் உட்பட பலர் பங்கேற்றனர்.

## காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கிணறுகள்...நிரம்பியது! நீர்மட்டம் உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

குமாரபாளையம்: குமாரபாளையம் பகுதி காவிரி நீர்பிடிப்பு பகுதியில் உள்ள கிணறுகள் நிரம்பியதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். காவிரி ஆற்றில், 20 மாதங்களுக்கு முன், தண்ணீர் இல்லாததால், நீர்பிடிப்பு பகுதிகள் வறண்டது. அதனால், விவசாய பணிகள் முற்றிலும் முடங்கியது. மக்கள் குடிநீருக்காக கடும் அவதிக்குள்ளாகினர். கிணறு, ஏரி, ஆழ்துளை கிணறு ஆகிய நீராதரங்கள் முற்றிலும் வறண்டது. இந்நிலையில், காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில், மழை பெய்ததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. அதையடுத்து, பாசனத்துக்காகவும், குடிநீருக்காகவும், மேட்டூர் அணையில் இருந்து நீர் திறக்கப்பட்டது. அதனால், நாமக்கல் மாவட்டத்தின், காவிரி கரையோரங்களில், விவசாயப் பணிகள் துரிதமாக நடக்கிறது. மேலும், குமாரபாளையம், பள்ளிபாளையம், மொளசி, ஜேடர்பாளையம், மோகனூர், ப.வேலூர் ஆகிய காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில், நீர்மட்டம் அதிகரித்துள்ளது. அதனால், வறண்டு கிடந்த கிணறுகள், ஆழ்துளை கிணறு, ஏரி, குளம், வாய்க்கால்,குட்டை ஆகிய பகுதிகளில் தண்ணீர் அளவு அதிகரித்துள்ளது. நீர்மட்டம் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், அப்பகுதிகளில் குடிநீர் தட்டுபாடும் வெகுவாக குறைந்துள்ளது. குமாரபாளையம் அடுத்த மேட்டூர் கிழக்கு வாய்க்கால் தொடங்கி, தட்டான்குட்டை, வேமன்காட்டுவலசு, கோட்டமேடு, ஆலாங்காட்டுவலசு, கல்லாங்காட்டுவலசு, வீரப்பம்பாளையம், வீ.மேட்டூர், ரங்கானூர், மேட்டுக்கடை ஆகிய பகுதிகளின் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் உள்ள கிணறுகள், ஆழ்துளை கிணறுகளில் தண்ணீர் மட்டம் அதிகரித்துள்ளது. அதனால், அப்பகுதியில், தற்போது ஆழ்துளை கிணறுகள் அமைப்பது நிறுத்தப்பட்டது. முற்றிலும், கிணற்றுநீர் பாசன முறையில், விவசாயப் பணிகள் துரிதமாக நடக்கிறது. குறிப்பாக, இரு ஆண்டுகளாக நெல் சாகுபடி இல்லாத நிலையில், தற்போது சிறு மற்றும் குறு விவசாயிகள், நெல் பயிரிடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

அப்பகுதி விவசாயிகள் கூறியதாவது:

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக, வறண்டு கிடந்த நிலத்தில், தற்போது தான் விவசாயப் பணிகள் துவங்கியுள்ளோம். நீர்மட்டம் உயர்ந்துள்ளதால், வாய்க்கால் உள்ளிட்ட பாசன வசதிகள் இல்லாத விவசாயிகள், தங்களது கிணற்றுநீர் பாசன முறையில், விவசாயம் செய்கின்றனர். கிணறுகள் நிரம்பிக் கிடப்பதால், வரும் ஆறு மாதத்துக்கு தண்ணீர்

பிரச்னை இருக்காது. அதற்குள், நெல் அறுவடை செய்யும் காலம் வந்துவிடும். அதனால், பெரும்பாலான விவசாயிகள், நெல் சாகுபடியில் ஆர்வம் காட்டுகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வடகிழக்கு பருவமழையை விவசாயிகள்...எதிர்பார்ப்பு! கரும்பு நடவு செய்யும் பணி தீவிரம்

தர்மபுரி: வடகிழக்கு பருவமழையை எதிர்பார்த்து, விவசாயிகள், கரும்பு நடவு துவங்கியுள்ளனர். தர்மபுரி மாவட்டம், விவசாய தொழிலை, பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில் மா, நெல் ஆகியவற்றுக்கு அடுத்தப்படியாக, விவசாயிகள் சாகுபடி செய்யும் முக்கிய பயிர் கரும்பு ஆகும். மாவட்டத்தில், நவம்பர் மாதத்தில், பெரும்பாலான விவசாயிகள், கரும்பு சாகுபடி செய்வது வழக்கம். கடந்த சில ஆண்டுகளுக்கு முன், கரும்பு, 15 ஆயிரம் முதல், 18 ஆயிரம் ஹெக்டேர் வரை சாகுபடி செய்யப்பட்டு வந்தது. சில ஆண்டுகளாக, மாவட்டத்தில் தென்மேற்கு, வடகிழக்கு பருமழை கை கொடுக்காதாதல், மாவட்டத்தில் கரும்பு சாகுபடி, 12 ஆயிரம் ஹெக்டேராக குறைந்தது. குறிப்பாக, கடந்தாண்டு போதிய பருவமழை இல்லாததால், கரும்பு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். ஆனாலும், பிற பணப்பயிர் சாகுபடியை விட, கரும்பு சாகுபடியில் ஓரளவுக்கு வருவாய் கிடைப்பதால், விவசாயிகள் தொடர்ந்து கரும்பு சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தாண்டு, தென்மேற்கு பருவமழை, எதிர்பார்த்த அளவு பெய்யாவிட்டாலும், பாலக்கோடு, பாப்பாரப்பட்டி, உள்ளிட்ட பகுதிகளில், ஓரளவுக்கு மழை கைகொடுத்தது. இப்பகுதிகளில் உள்ள நீர் நிலைகளுக்கு, ஓரளவுக்கு தண்ணீர் தேங்கியதுடன், நிலத்தடி நீர் மட்டம் சற்று உயர்ந்துள்ளது. மேலும், இந்தாண்டு வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யும் என, வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். பாலக்கோடு உட்பட, மாவட்டம் முழுவதும், கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள், சில தினங்களாக, கரும்பு நடவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்து, செல்லியம்பட்டியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியது:

இப்பகுதியில் உள்ள விவசாயிகள், கடந்த, 20 ஆண்டுகளுக்கு மேலாக கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர். கரும்பு ஒரு ஆண்டு பயிரானாலும், விதை கரும்பு, நடவு கூலி,

பராமரிப்பு உள்ளிட்டவைகள் போக, ஏக்கருக்கு ஆண்டுக்கு, ஒரு லட்சம் ரூபாய் வரை வருமானம் கிடைத்து வந்தது. எங்கள் பகுதிகளில், அதிகளவில் சிறு வெல்ல ஆலைகள் உள்ளதால், அதன் உரிமையாளர்கள், ஒரு டன் கரும்பை, 2,700 ரூபாய் முதல் வாங்கிச் செல்கின்றனர். இதனால், எங்களுக்கு மற்ற பணப்பயிர்களை விட, கரும்பு சாகுபடியில், கூடுதல் வருமானம் கிடைக்கிறது. கடந்தாண்டு, போதிய பருவமழையின்றி பாதிக்கப்பட்டாலும், மாவட்டத்தில், இந்தாண்டு தென்மேற்கு பருவமழை சுமாராக பெய்ததாலும், வட கிழக்கு பருவமழை கை கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பில், விவசாயிகள், நவம்பர் மாதம் கரும்பு நடவை துவங்குவதற்கு பதில், இந்தாண்டு, அக்டோபர் துவக்கத்தில் இருந்தே கரும்பு நடவை துவங்கியுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

## முட்டைகோஸ் அறுவடை துரிதம்

கோத்தகிரி · கோத்தகிரி பகுதியில் முட்டைகோஸ் அறுவடையை விவசாயிகள் துரிதமாக்கியுள்ளனர். கோத்தகிரி நெடுகுளா, காவிலோரை, வ.உ.சி.,நகர், கேர்கம்பை, சுள்ளிகூடு, கூக்கல் தொரை மற்றும் கட்டபெட்டு சுற்றுவட்டார பகுதிகளில் காரட், பீட்ரூட், பீன்ஸ் மற்றும் உருளைக் கிழங்கு உள்ளிட்டவைகள் உற்பத்தி செய்யப்பட்டாலும், முட்டைகோஸ் சாகுபடி அதிகளவி லான பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது, முட்டைக் கோஸ் கிலோ ஒன்றுக்கு 6 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. தயாரான முட்டைக்கோஸ் குறித்த நேரத்தில் அறுவடை செய்யாதபட்சத்தில், இனிவரும் நாட்களில் கனமழைப் பெய்யும் போது, தோட்டத்திலேயே அழுகி விடும் நிலை உள்ளது. இதனால், தோட்டத்தில் தயாரான முட்டைகோசை துரிதமாக அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஆம்பூர் அருகே கால்நடை மருத்துவ முகாம்

**ஆம்பூர்,**



கரும்பூர் இந்து மேல்நிலைப்பள்ளி நாட்டு நலப்பணி திட்ட முகாம் மோதபல்லி கிராமத்தில் நடந்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக இலவச கால்நடை மருத்துவ முகாம் நடந்தது. முகாமிற்கு ஜெயசீலன் தலைமை தாங்கினார்.

டாக்டர்கள் விணுடேவில், மோகனப்பிரியா ஆகியோர் கலந்து கொண்டு கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர். முகாம் அலுவலர் கிரிதர் வரவேற்றார். முடிவில் திட்ட உதவி அலுவலர் அருண்குமார் நன்றி கூறினார்.

## சத்தியமங்கலம் வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.21 லட்சத்துக்கு பருத்தி–வாழைப்பழத்தார்கள் விற்பனை



**சத்தியமங்கலம்,**

சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ரூ.21 லட்சத்துக்கு பருத்தி மற்றும் வாழைப்பழத்தார்கள் விற்பனையானது.

பருத்தி ஏலம்

சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு சத்தியமங்கலம், அரசூர், இண்டியம்பாளையம், அரியப்பம்பாளையம், சிக்கரசம்பாளையம், மேட்டூர், தங்கநகரம், கொமராபாளையம் உள்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள் 696 மூட்டைகளில் பருத்தி கொண்டு வந்திருந்தார்கள்.

இதில் ஒரு குவிண்டால் பருத்தி குறைந்தபட்சவிலையாக 5 ஆயிரத்து 200 ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக 6 ஆயிரம் ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.13 லட்சத்துக்கு பருத்தி விற்பனையானது. இந்த பருத்திகளை கோவை, அவினாசி, சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம் ஆகிய பகுதிகளில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் ஏலம் எடுத்தனர்.

வாழைப்பழத்தார்

வாழைப்பழ ஏலத்துக்கு விவசாயிகள் 4 ஆயிரம் வாழைப்பழத்தார்களை கொண்டு வந்திருந்தனர். இதில் கதலி கிலோ ஒன்று ரூ.42 ரூபாய்க்கும், நேந்திரம் கிலோ 48 ரூபாய்க்கும், செவ்வாழை தார் ஒன்று 700 ரூபாய்க்கும், ரஸ்தாரி தார் ஒன்று 600 ரூபாய்க்கும், தேன்வாழை தார் ஒன்று 780 ரூபாய்க்கும், மொந்தன் தார் ஒன்று 500 ரூபாய்க்கும், பூவன் தார் ஒன்று 520 ரூபாய்க்கும், ரொபஸ்டா தார் ஒன்று 460 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.8 லட்சத்துக்கு விற்பனையானது.

பருத்தி மற்றும் வாழைப்பழத்தார்கள் ரூ.21 லட்சத்துக்கு விற்பனையானது. ஏலம் முடிவடைந்த உடன் சங்கத்தின் தலைவர் வி.சி.வரதராஜ் மற்றும் மேலாண்மை இயக்குனர் வசந்தி ஆகியோர் முன்னிலையில் விவசாயிகளுக்கு உடனடியாக பணம் வழங்கப்பட்டது.

## ரத்த அழுத்தத்தை குறைக்கும் வெள்ளைப்பூண்டு



ரத்த அழுத்தத்துக்கான மாத்திரைகளை விடவும் வெள்ளைப்பூண்டு மிகவும் சக்தி வாய்ந்தது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தினமும் வெள்ளைப்பூண்டை ஏதாவது ஒரு வகையில் உணவில் சேர்த்து வந்தால் ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்தும்.

உயர்ரத்த அழுத்தம் கொண்ட ஆயிரக்கணக்கானவர்களுக்கு ஆண்டுதோறும் மாரடைப்பு ஏற்படுவதாக தெரியவந்துள்ளது. ரத்த அழுத்தம் அதிகமாக உள்ளவர்கள் சுமார் 5 மாத காலத்துக்கு தினமும் வெள்ளைப்பூண்டு அடங்கிய உணவினை உண்டு வந்தால் அவர்களின் ரத்த அழுத்தமானது குறிப்பிடத்தக்க அளவுக்கு குறையும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சில நேரங்களில் உயர் ரத்த அழுத்த நோயாளிகள் எடுத்துக்கொள்ளும் மாத்திரையின் விளைவுகளைக்காட்டிலும் வெள்ளைப்பூண்டு நல்ல பலனை கொடுத்திருப்பது தெரியவந்துள்ளது.